சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் :
தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

**19** பகுதி-4
Part -4

Scanned by TapScanner

மற்றொன்று:

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

Scanned by TapScanner

# 'பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை' நாவலில் பூனாச்சியின் இருப்பும் தகர்வும்

செ. மகாலிங்கம்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, திருசெங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

சமூக நடத்தைகள், வாழ்வியல் கூறுகள், வரலாற்றுக் குறிப்புகள் எனப் பலவற்றையும் அச்சு நூல்கள் பதிவு செய்துள்ளன. இலக்கிய வடிவங்கள் பல இருப்பினும் புனைவிலக்கியங்கள் மூலம் தங்களுடைய கருத்துகளைப் படைப்பாளர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். எளிதில் கவனம் பெறக்கூடிய எழுத்துகள் அதற்கான இடத்தைத் தக்கவைத்துக்கொள்கின்றன. அந்த வகையில் பெருமாள்முருகனின் 'பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை' நாவல் வெளிக்காட்டும் பூனாச்சியின் இருப்பும் தகர்வும் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

வயதான குடியானக் கிழவன், கிழவி ஆகியோர் தங்களுக்குச் சொந்தமான வானம் பார்த்த அரை ஏக்கர் நிலத்துடன் வெள்ளாடுகள், எருமைக் கன்று வளர்த்துப் பராமரித்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் ஒரே மகளும் மூன்று கல் தொலைவில் இருக்கின்ற ஊரில் இருக்கின்ற விவசாயிக்குக் கட்டிக்கொடுக்கின்றனர். ஒருமுறை ஆடுகளை மேய்த்துக்கொண்டு வீடு திரும்புகையில் பகாசுரன் ஒருவனால் கையளிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியுடன் வீட்டிற்குக் கிழவன் வருகிறான்.அக்குட்டி பூனாச்சி என்னும் பெயருடன் வளர்ந்து இரண்டு ஈத்துகளில் முறையே ஏழு குட்டிகளை ஈன்று, இறுதியில் குட்டி ஈனும் தறுவாயில் அப்போது ஏற்பட்ட கடும் பஞ்சத்தில் இறந்துவிடுவதோடு: நாவல் முடிவடைகிறது. இந்நாவலில் பூனாச்சி சந்திக்கும் கசப்பான அனுபவங்கள் எழுத்தாளரின் மனப் பதிவுகளாகப் பிரதிபலிப்பதைக் காணலாம்.

## துன்பத்திலிருந்து விடுபடல்

பூனாச்சி என்னும் வெள்ளாடு, கிழவனின் வீட்டுக்கு வந்ததிலிருந்து மூன்று இக்கட்டுகளைச் சந்தித்து அதிலிருந்து மீண்டுவருகிறாள். காட்டிலிருந்து ஆடுகளை ஓட்டிக்கொண்டு வரும்போது பகாசுரன் தன்னுடைய கையில் கொடுத்துவிட்டுச் சென்ற 'குப்பைப்புழு' போன்ற இக்குட்டியைக் கூடையில் வைத்துக் கிழவன் நடக்கிறார். அப்போது பூங்குட்டியைத் தூரத்திலிருந்து பார்த்த கழுகுகள் கூடையை வட்டமிட்டு அதைத் தூக்க முயன்றபோது மேய்ச்சல்காரர்களால் துரத்தப்பட்டுக் காப்பாற்றப்பட்டது.

அடுத்து, கிழவியின் பராமரிப்பில் வளர்ந்துவந்த பூனாச்சியைத் தான் படுக்கின்ற கட்டிலுக்கடியில் கூடையில் அடைத்துவிடுவார். ஒருமுறை தூரத்து உறவினரான தன் வயதொத்த கிழவி வீட்டிற்கு வந்திருந்தார். அன்றிரவு பாடுபழமைகளைப் பேசிக்கொண்டு பூனாச்சியைக் கூடையலி அடைக்காமல் மறந்துவிட்டார். அதனால் மற்ற வெள்ளாடுகள் கட்டியிருந்த இடத்தில் பூனாச்சி படுத்திருக்க, நள்ளிரவில் காட்டுப்பூனை ஒன்று பூனாச்சியின் கழுத்தைக் கவ்விக்கொண்டு சென்றபோது அதன் கத்தலைக்கேட்டு விழித்துக்கொண்ட கிழவி, தடியை வீசி அப்பூனையின் பிடியிலிருந்து விடுவித்தாள்.

இறுதியில் கிழவனும் கிழவியும் தன்னுடைய மகள் வீட்டு நோம்பிக்கு ஆடுகளுடன் நடைபயணமாகச் சென்றபோது ஓரிடத்தில் தங்கினர். இருவரும் கண்ணயர்ந்த நேரத்தில்



Scanned by TapScanner

மலங்காட்டில் திசை தவறிப்போய்விட்ட பூனாச்சி, அன்றிரவு கொடிய காட்டுப் பன்றகள் உலாவுகின்ற பகுதியில் கூர்மையான பாறை மறைவில் இருந்துவிட்டு மறுநாள் கத்திக்கொண்டே கிழவியின் குரல் வருகின்ற திசையில் வருகிறாள். கிழவியும் அன்றிரவு தூக்கமின்றித் தவித்ததுடன் பூனாச்சியைத் தேடிக் கண்டடைந்தான் மகள் வீட்டுக்குச் சென்றடைகிறார்.

### ஏழு குட்டி வர்க்கம்

பூனாச்சியின் தாய் யாரென்று தெரியாது. ஆனால் கிழவனிடம் பகாசுரன், 'இது ஏழு குட்டி போடுற வர்க்கம். இந்தக் குட்டி ஏழாவதா போட்டது. நானும் சந்தை சாரியெல்லாம் சுத்திட்டு வந்துட்டேன். நல்ல மனசுள்ளவங்கள பாக்க முடியல. உங்கள பாத்தாநல்லவங்களா தெரிது. அதனால் இந்தக் குட்டிய நீங்களே வளத்துக்கோங்கனு சொல்லிக் கொடுத்தான்'. பணம் கொடுப்பதற்குள் மாயமாகிவிட்டான் என நடந்த சம்பவத்தைக் கிழவியிடம் கிழவன் எடுத்துரைத்தார்.

பகாசுரன் சொன்னது போலவே, கிழவியின் பராமரிப்பில் கம்மஞ்சோற்று நீத்தண்ணி, களி நீத்தண்ணி, அவ்வப்போது பிற வெள்ளாடுகளில் கிடைக்கின்ற சிறிதளவு பால், பசுமையான இழைதழைகளை உண்டு வளர்ந்த பூனாச்சி, முதல் ஈத்தில் பேற்றுக்காரனின் கணிப்பையும் பொய்யாக்கி ஏழு குட்டிகளை ஈன்றாள். அடுத்த ஈத்திலும் சொன்னதுபோன்றே ஏழு குட்டிகளை ஈன்றெடுத்தாள். அனைவராலும் நம்பமுடியாத ஆனால் அதிசயமான ஏழு குட்டி ஈனுகிற பூனாச்சி குறித்துப் பக்கத்து ஊர் வரை பேசிக்கொண்டனர். இத்தகைய அதிசய ஆடு கடைசி ஈத்து காலத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தில் இறந்துவிடுகிறாள்.

### பூனாச்சியின் மகிழ்ச்சி

கிழவன், கிழவியின் மகள் வீட்டு நோம்பிக்குச் சென்று அங்கு ஒருவாரம் தங்கியிருந்தபோது பூவன் என்ற ஆட்டுக்கிடாயின் நட்பில் பூனாச்சி குதூகலித்திருந்தாள். மேய்ச்சலுக்குச் சென்ற இடத்தில் நல்ல நல்ல இழைதழைகளைத் தேடிக்கொடுத்த பூவனிடம் அன்பு செலுத்தினாள். முத்தங்களைப் பரிமாறிக்கொண்ட அவள் பருவமடையாத வயது. மறுபடியும் தன்னுடைய வீட்டிற்கு வந்தும் பூவனின் நினைவுகளிலேயே திளைத்திருந்தாள்.

அடுத்த வருடம் நோம்பிக்குச் சென்றபோது பூவனைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்தாள். காரணம் இரண்டாம் ஈத்துக்குத் தயாராக இருந்த தருணம். அங்கு தங்கியிருந்த ஓரிரவில் பூவனுக்குத் தன்னையே முழுமையாகக் கொடுத்தாள்.

மலங்காடடிற்குள் காணாமல் போனபோது நெடுந்தொலைவிற்குச் சென்று அன்றிரவு தங்கினாள். அப்போது பொய்கையில் குதித்து விளையாடும் காட்டுப் பன்றிகளைப் போலத் தானும் இருந்துவிட வேண்டும். கிழவியின் கண்ணில் படக்கூடாது என நினைத்துப் பெரிய பாறை மறைப்பில் உற்சாகமாகத் தங்கியிருந்தாள்.

### துயரநிலை

பூனாச்சி பல்வேறு நிலைகளில் தன் துயரத்தை வெளிப்படுத்துவதைக் காணலாம். பூவன் நினைப்பிலிருந்து விலகாத நிலையில் பருவத்திற்குத் தயாரானாள். தலையீத்தில், பெரிய கிழட்டுக் கிடாய் தன் மீது அணையும்போது பூவனை நினைத்துக்கொண்டு வெறுப்படைந்தாள். மூன்றாம் ஈத்திலும் பெரிதும் விரும்பிய பூவன் இல்லாத வெற்றிடத்தை உணர்ந்தாள். வறட்சி தாண்டவமாடிய பொழுதொன்றில் மேய்ச்சல் காட்டில் அந்நியமான கிடாய் ஒன்றுக்குத் தன்னையே கொடுத்தாள்.

முதல்முறை நோம்பி முடிந்து திரும்புகையில் வெய்யாமைக் காட்டிலிருந்த கடலைச் செடிகளைக் கடித்துக்கொண்டிருந்த வேளையில் தோட்டக்காரனால் நெற்றிப்பொட்டில் கல்லடி பட்டு இறந்த உழும்பன், இரண்டாம் முறை நோம்பிக்குச் சென்றபோது அன்றிரவு தன்னுடன் இணைந்திருந்த



Scanned by TapScanner

பூவன் மறுநாள் காலையில் மோசாசுரனுக்குப் பலியாகிக் கறித்துண்டுகளாகக் கிடந்த காட்சி, முதல் ஈத்தில் தன்னுடைய ஏழு குட்டிகளையும் வியாபாரி வாங்கிச் சென்றது. அடுத்த ஈத்தில் ஏழு குட்டிகளுள் நான்கை ஈன்ற அடுத்த நாளே பிரிந்தது. மீதமிருந்த மூன்றில் கடும் பஞ்சம் காரணமாக இரண்டு கிடாய்களைக் கிழவனும் கிழவியும் உப்புக்கண்டம் போட்டு உண்டது. ஆடுகளைத் துரத்திக்பொண்டு திரிந்த கடுவாயனுக்குக் காயடித்து வலியால் துடித்த காட்சி எனப் பலவற்றால் துயருற்றிருந்த நிலையைப் பூனாச்சியினூடாகக் காணமுடிகிறது.

## சுதந்திரத்திற்கு தடை

மனிதர்கள் தங்களுடைய பிறப்பு, இறப்பு விவரங்களைப் பதிந்து வருவதைப் போன்றே விலங்குகளுக்கும் பதிய வேண்டும் என்பது ராசாங்கத்தின் நடைமுறை. அதற்கு அடையாளமாக ஆடுகளுக்குக் காதுகுத்தி, அடையாள எண் பொறிக்கப்பட்டுள்ள பித்தளைத் தோட்டை மாட்டிவிடுவர். ஆடுகள் குட்டி ஈன்றதும் எண்ணிக்கையைச் சொல்லிப் பதிந்துவிட வேண்டும். தாமதித்தால் அதிகாரிகளின் அலைக்கழிப்பு, மிரட்டல்களுக்கு ஆளாக நேரிடும். காது குத்தும்போது உண்மை விவரங்களைக் குறிப்பிடவேண்டும். தவறினால் பொய் வழக்கு போட்டு உள்ளே தள்ளிவிடுவார்கள். இந்நிலையில் அரிதாகக் கிடைக்கப்பெற்ற பூனாச்சிக்குக் காது குத்துவதற்காகக் கிழவி கொண்டுபோனாள். குத்தும்போது காது நரம்பில் பட்டு, ரணமாகி, சீழ்பிடித்து ஒரு மாதத்திற்குப் பின்பே பூனாச்சி குணமடைந்தாள்.

பொதுவாகத் தாங்கள் எண்ணியவாறு சுதந்திரமாக வாழ்ந்துவருவதற்கு அதிகாரத்தில் இருப்பவர்களால் தடை விதிப்பதென்பது தொன்றுதொட்டு இருந்து வருவது. காது குத்தும் இடத்தில் அதிகாரிகளின் மனங்கோணாமல் அவர்களின் சொற்படி நடந்துகொள்வது. கடும் வெயிலில் வரிசையில் நிற்பது, எதிர்த்துப் பேசாமல் இருப்பது போன்றவற்றை நாவலில் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார்.

"வாயிருப்பது மூடிக்கொள்ளத்தான். கையிருப்பது கும்பிடு போடத்தான். காலிருப்பது மண்டியிடத்தான். முதுகிருப்பது குனியத்தான். உடலிருப்பது ஒடுங்கத்தான். ராசாங்கத்திடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை எல்லாரும் நன்றாகவே கற்றிருந்தார்கள்" என்னும் கூற்று சுதந்திரத்திற்குத் தடைபோடுவதைச் சுட்டுகிறது.

## போராட்டக் குணம்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணமுண்டு. நடக்கின்ற அநீதிகளைத் தட்டிக்கேட்கின்றவர். எது நடந்தாலும் அதிலிருந்து முற்றிலும் தங்களை விடுவித்துக்கொள்கின்றவர். இந்த இருநிலைகளில் மனிதர்களின் குணநலன்களைப் பொதுவாகப் புரிந்துகொள்ளலாம்.

"மேயும்போது தலை குனியலாம். தண்ணீர் குடிக்கும்போது தலை குனியலாம். சும்மா நடக்கும்போது கூடவா தலை குனிய வேண்டும்? தரையைத் தவிர எதையுமே கண் பார்க்காமல் வாழ்வதும் ஒரு வாழ்வா?"

"எப்போதும் தளையை அவிழ்த்தெறிந்துவிடும் முயற்சியை வெள்ளாடுகள் செய்கின்றன. செம்மறிகளுக்குத் தளையும் இல்லை முயற்சியும் இல்லை. இயல்பிலேயே குனிந்துவிட்டால் ஏது தளை? குனிவைத் தளை என்று உணராமல் வாழும் பாக்கியம் பெற்றவை செம்மறிகள்".

மேற்கட்டிய கருத்துகளில், வெள்ளாடு-செம்மறி ஆடு இரண்டுக்குமுள்ள குணநலன்களைக் குறிப்படுவதுடன் போராட்டக் குணத்திற்கு வெள்ளாடு, சிந்திக்கும் திறன் அற்றதுக்குச் செம்மறி ஆடு போன்றவை மனிதர்களுக்குக் குறியீடுகளாகச் சுட்டப்பட்டுள்ளன. மேலும் தனக்கு இழைத்த அநீதிக்கு எதிரான செயல்பாடுகளை முறியடித்துத் தன் இருப்பைத் தக்கவைத்துக்கொள்பவர், இதற்கு மாறான போராட்ட முனைப்பின்றி இருக்கின்ற குரலற்றவரின் இயல்போடு ஒன்றிணைவதைப் பார்க்கலாம்.



Scanned by TapScanner

## முடிவுரை

'பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை' நாவலில், விவசாயக் குடும்பமொன்றிலிருந்து அரசு ஊழியராக உயர்ந்து, தொடக்கத்தில் எழுத்துத் துறையில் அறிமுகமாகி, தன்னுடைய கருத்துகளால் பரிணமித்துத் தனக்கான இருப்பை அடைந்தார். பின்பு சுதந்திரமாக எழுதிவந்த எழுத்துக்கு இறுதியில் முட்டுக்கட்டை போடப்பட்டு அடையாளமிழந்த ஆசிரியரின் அனுபவமே பூனாச்சி கதை பாத்திரம் மூலம் வெளிப்பட்டிருப்பதை உணரமுடிகிறது.

மேலும் நாவலில், பகாசுரனால் கிழவனிடம் கையளிக்கப்பட்ட பூனாச்சி, இரண்டு ஈத்துகளில் தன் இனத்தை விருத்தியடையச் செய்து, இறுதியில் மரித்துப்போவதை மேலே குறிப்பிட்ட நிகழ்வுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் இடமுள்ளது.

## பயன்பட்ட நூல்

1. பெருமாள்முருகன், பூனாச்சி அல்லது வெள்ளாட்டின் கதை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2016.

ஃ